**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

*10th ஆகஸ்ட் / August 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

Outreach & Social Concerns Sunday

| | |
|---|---|
| **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. அமுதா பிரேம்குமார்**<br>Mrs. Amutha premkumar |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. அமுதா பிரேம்குமார்**<br>Mrs. Amutha premkumar |
| **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**மெய் தேவனைத் துதி**

*1. மெய் தேவனைத் துதி; பெரு நன்மை செய்தார்*
*குமாரனைத் தந்துன்னையே நேசித்தார்*
*உன் பாவத்துக்காய் இயேசுவே மரித்தார்*
*நீ மோட்சத்தில் சேர ஆருயிர் தந்தார்.*

**போற்றுவோம்! போற்றுவோம்! ஜீவநாயகனே**
**நம்புவோம்! நம்புவோம்! லோகஇரட்சகரை,**
**மீட்பரின் மூலம் பிதாவின் சந்நிதி**
**வந்து துதிப்போம், மா நன்மை செய்தார்!**

*2. சம்பூரண மீட்பைச் சம்பாதித்தனர்.*
*நல்லாசை உள்ளோர்க்கு ஈவேன் என்றனர்;*
*எப்பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால்*
*அந்நேரமே மன்னிப்புண்டாம் இயேசுவால்.*

*3. பேரன்பின் சொரூபி மெய் தாசருக்கே*
*ஒப்பற்ற சந்தோஷத்தை அளித்தீரே*
*ஆனாலும் பேரின்பத்திற் சேரும் போதோ*
*உண்டாகும் மகிழ்ச்சிக்கு வரம்புண்டோ?*

| | |
|---|---|
| **மாறி வாசித்தல் 32ம் ஞாயிறு**<br>**"சங்கீதம் 98"** | **சபையார் இணைந்து**<br>Congregation |

"தேவனுடைய இரட்சிப்பு"

Psalter Reading "Psalm 98"

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**பிறர் வாழ வேண்டுமெனில்**

**பிறர் வாழ வேண்டுமெனில்**
**நான் சாக வேண்டும்**
**நான் சாகவேண்டுமெனில்**
**அவர் வாழ வேண்டும் - எனில் இயேசு**
**தினம் வாழ வேண்டும்**

*1. நான் என்னும் ஆணவத்தால்*
*நாளெல்லாம் வாழ்ந்திருந்தேன்*
*பிறர் வாழ்வை எண்ணாமல்*
*பாதையிலே மயங்கி நின்றேன்*
*இன்றே என்னை அற்பணம் செய்திடுவேன்*

*2. மற்றவர்கள் மனம் மகிழ*
*மன்னவனே நீர் மரித்தீர்*
*மற்றவர்கள் மனம் நோக*
*மதியிழந்து நான் இருந்தேன்*
*இன்றே என்னை அற்பணம் செய்திடுவேன்*

*3. உலகுக்காய் நான் வாழ*
*ஒரு மனது துடிக்கையிலே*
*உள்ளுக்குள் கறைபட்ட*
*மறு மனது மறுத்ததையா*
*இன்றே என்னை அற்பணம் செய்திடுவேன்*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திருமதி. நான்சி தினகரன்**
***லூக்கா 14 : 1 - 6***
Scripture Reading — Mrs. Nancy Dinakaran
Luke 14 : 1 - 6

**அருளுரை** — **ஜெசில்ன் என்ஜி**
Sermon — Jessyln Ng

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

*__தாசரே, இத்தாரணியை அன்பாய்__*

**தாசரே, இத்தாரணியை அன்பாய்**
**யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.**

**நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்**
**காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,**
**வெளிச்சம் வீசுவோம்**

*1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை,*
*வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,*
*உரித்தாய் யேசு பாவப் பாரத்தை*
*நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே.*

*2, பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்*
*பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,*
*யேசு கனிந்து, திரிந்தனரே.*

*3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை*
*நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,*
*நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே,*

*4. இந்த தேச மாது சிரோமணிகள்*
*விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;*
*சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து*
*நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட.*

*5. மார்க்கம்தப்பி நடப்போரைச் சத்ய*
*வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்*
*ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,*
*நாம் உழைத்திடுவோம், நாம்*
*ஜெயித்திடுவோம்*

**அறிவிப்புகள்**
Announcements

O & S Concerns Presentation

✝ ***__மனப்பாட வசனம்__*** — ***சபையார் இணைந்து***
__Memory Verse__ — Congregation
***பிலிப்பியர்*** 4 : 8
Philippians 4 : 8

***8. கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** / **Indicates Congregation standing**